# 18. அரேபியர்களின் சிந்து படையெடுப்பு

## அரேபியர்கள் சிந்துவைக் கைப்பற்றுதல் :

வட இந்தியாவின் மீது முதன் முதலாகப் படையெடுத்தவர்கள் அரேபியர்களேயன்றி துருக்கியர்களன்று. முகமதுநபி உயிர் நீத்தபின் அவரது கொள்கைகளை உலகெங்கும் பரப்பும் பொருட்டு அரேபியர்கள் தங்கள் பாலைவனப்பகுதிகளின்றும் புறப்படலாயினர். அரேபியர்கள் அஞ்சா நெஞ்சமுடன் போராடி பல இடங்களை வென்றனர். இருபது ஆண்டுகளுக்குள்ளாகவே சிரியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய இடங்களின்மீது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். அவர்கள் பாரசீகத்தைக் கைப்பற்றிவிட்டதால் அதற்கப்பாலுள்ள கீழ்த்திசை நாடுகளையும் கைப்பற்றிவிட வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற்படலாயிற்று. இந்தியாவின் இயற்கை வளத்தையும், உருவ வழிபாட்டு முறைபற்றியும் இதற்கு முன்பே அரேபியர்கள் ஷிராஸ் (Shiraz), ஹர்மூஸ் (Hurmuz) ஆகிய இடங்களைச் சேர்ந்த வணிகர்கள் மூலம் கேள்விப்பட்டிருந்தனர். பலவித இன்னல்களையும், இயற்கையினால் ஏற்பட்ட பல தடங்கல்களையும் பொருட்படுத்தாமல் அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடரலாயினர். இந்தியாவின் மீது படையெடுக்கவேண்டுமென்று அவர்கள் உறுதி பூண்டனர். சமயத்தைப் பரப்ப வேண்டுமென்ற ஆர்வமும் நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமென்று பேராசையும் அவர்களிடமிருந்தது.

இந்தியாவின் கடற்கரைப் பகுதியிலுள்ள இடங்களைக் கொள்ளையடிக்கும் பொருட்டு ஊமன் (Uman) என்னுமிடத்திலிருந்து கி. பி. 636-37ல் அதிகாரப்பூர்வமான முதல் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. உமார் காலிஃபாவின் காலத்தில் இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. நாடுகளைச் கைப்பற்றி ஆட்சி செலுத்துவதைக் காட்டிலும் கொள்ளையடித்தலே அவர்களது படையெடுப்பின் முக்கிய நோக்கமாகும். வெகு தொலைவிற்கு அப்பால் சென்று கொள்ளையடிப்பது ஆபத்துக்கள் நிறைந்ததாய்க்

காணப்பட்டதால், காலிஃபா இதற்கு அனுமதிதர மறுத்தார். நீண்டதூர கடற்பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென்று அவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். கடற் பயணங்கள் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. இதனால் கடற் பயணங்களும் வர்த்தகமும் பெரிதும் தடைபட்டன. ஆனால் உமாருக்குப் பின்னர் காலிஃபாவாக பதவியேற்றவர்கள் இக்கட்டுப் பாடுகளைத் தளர்த்தினர். படையெடுப்புக்களை மேற்கொள்ள அரேபியர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதனால் புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடும் பொருட்டு .அரேபியர்கள் புறப்படலாயினர்.

அப்துல்லா அமர்பின் ரபி என்பவர் கி. பி. 643—இல் கிர்மன் (Kirman) என்னுமிடத்தைக் கைப்பற்றியபின், சிஸ்டான் என்னு மிடத்தை நோக்கி முன்னேறிச் சென்றார். இவர் சிஸ்டான் மன்னரை வென்று அவருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் பின்னர் தனது படைகளுடன் மெக்ரானை நோக்கிப் புறப்பட்டார். மெக்ரான் சிந்து ஆகிய இரு நாடுகளின் மன்னர்களும் கூட்டு சேர்ந்து அமர்பின்ரபியை எதிர்த்துப் போரிட்டனர். இருப்பினும் அவர்களால் வெற்றிபெற இயல வில்லை. அமர்பின் ரபி அவ்விரு அரசர்களையும் தோற்கடித்து விரட்டினார். அப்துல்லா அமர்பின்ரபி மேலும் பல படையெடுப்புக் களை மேற்கொண்டு பல இடங்களை வெல்லவேண்டுமென்று விரும்பினார். ஆனால் காலிஃபா அவரை இனிமேல் படை யெடுப்புக்களை மேற்கொள்ளவேண்டாமென்று கேட்டுக் கொண்டார். இருப்பினும் சில ஆண்டுகளுக்குப் பின் அரேபியர்கள் படையெடுப்புகளை மேற்கொள்ளத் துவங்கினர்.

அரேபியர்கள் படையெடுத்து பல இடங்களை வென்றனர். அவர்கள் கி. பி. 710–இல் கார்த்தேஜ், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளை வென்றனர். கோதிக் பேரரசை (Gothic Kingdoms) அவர்கள் அழித்தனர். தோல்வியுற்ற நாடுகளில் வாழ்ந்த மக்களிடம் அரேபிய பண்பாடுகளைப் பரப்பினர். அவர்கள் பெற்ற வெற்றி களின் மூலம் அவர்களது செல்வாக்கும். பெருமையும் உயர லாயிற்று. உமாயது காலிஃபாவின் ஆட்சிக்காலத்தில் அரேபியர்கள் மிகவும் வலிமை வாய்ந்தவர்களாயினர். ஹாஜாஜ் (Hajjaj) இராக்கின் கவர்னராவார். இவர் ஆதிக்க மனப்பான்மையுடையவர். இவர் காபூல் அரசருக்கெதிராக ஓர் படையினை அனுப்பி வைத்தார். சிந்துவிலுள்ள தீபால் (Debel) என்னுமிடத்தை சேர்ந்த கடற்கொள்ளைக்காரர்களை அடக்கும் பொருட்டு மற்றொரு படையினை அனுப்பி வைத்தார். இலங்கையின் மன்னர் 8 கப்பல்களில் ஏராளமான பரிசுப்பொருட்களை காலிஃபாவிற்கும் ஹாஜாஜிற்கும் அனுப்பியிருந்தார். இவற்றை தீபாலைச் சேர்ந்த

கடற்கொள்ளைக்காரர்கள் கைப்பற்றிச் சென்று விட்டனர். ஹாஜாஜின் வீரர்களால் கடற்கொள்ளைக்காரர்களை தோற்கடிக்க இயலவில்லை. சிந்தியர்கள் அரேபியத் தளபதியைத் தோற்கடித்துக் கொன்றனர். கடற்கொள்ளைக்காரர்களை அடக்க மேற்கொண்ட படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. இத்தோல்வியினால் வேதனையுற்ற ஹாஜாஜ், சிந்தியர்களை எவ்வாறேனும் தோற்கடித்துவிட வேண்டுமென்று முடிவு செய்தார். சிந்தியர்களுக் கெதிராக மற்றொரு படையெடுப்பை மேற்கொள்ள முடிவு செய்தார். இப்படையெடுப்பு முகமதுபின் குவாஸிமின் பொறுப்பில் விடப்பட்டது. முகமதுபின் குவாஸிமிற்கு நல்ல எதிர்காலமிருப்ப தாகவும், இப்படையெடுப்பிற்கு தலைமை தாங்க இவரே பொருத்த மானவரென்றும் சோதிடர்கள் கூறினர்.

**முகமதுபின் குவாஸிம் சிந்துவின்மீது படையெடுத்தல் : (712 A.D.)**

முகமதுபின் குவாஸிமின் சிந்து படையெடுப்பு வரலாற்றில் காணப்படும் சுவைமிக்க சம்பவங்களில் ஒன்றாகும். இளமைத் துடிப் பும், இணையிலா வீரமும் உடைய இவர் வெகு விரைவில் வீழ்ச்சி யுற்றது பெரும் வியப்பைத் தருவதாயுள்ளது. மிகுந்த தன்னம்பிக்கையுடைய இவர் பொருக்கியெடுத்த 6,000 சிரிய, இராக்கிய போர் வீரர்களின் துணையுடன் தனது இந்திய படை யெடுப்படை மேற்கொண்டார். இவர் 3000 பாக்திரிய ஒட்டகங் களையும் போர்க்களத்திற்கு கொண்டு சென்றார். இவர் மெக்ரானை அடைந்தபோது அம்மாநிலத்தின் ஆளுநர் ஹருண் (Harun) இவருக்கு போர்க்கருவிகளையளித்து ஊக்க மூட்டினார். ஜாட்டுகள், மீட்சுக்களை (Medes) போன்ற வகுப்பைச் சேர்ந்த வர்கள் இந்தியாவில் வாழ்ந்து வந்தனர். இந்திய சமுதாயத்தின் உயர் பிரிவைச் சேர்ந்தவர்கள் இவர்களைக் கொடுமைப்படுத்தி வந்தனர். இதனால் ஜாட்டுகளும், மீட்சுக்களும் இந்திய சமுதாயத்தின் பால் வெறுப்புக்கொண்டிருந்தனர். இத்தகை யோரை முகமதுபின் குவாஸிம் தனது படையில் சேர்த்துக்கொண்டு தனது படைபலத்தைப் பெருமளவிற்கு பெருக்கினார். ஜாட்டுகள் குதிரை சவாரி செய்வதற்கோ, விலையுயர்ந்த ஆடைகளை அணிவ தற்கோ, செருப்புக்களை அணிவதற்கோ அனுமதிக்கப்படவில்லை. இதனால் வெறுப்புற்றிருந்த ஜாட்டுகள் அரேபியர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டனர்.

முகமது பின் குவாஸிம் கி. பி. 712-இல் தீபாலை அடைந்தார். இவரது வீரர்கள் மறைகுழிகளை| வெட்டும் பணியிலீடுபட்டனர். தேபாலிலுள்ள ஓர் பெரும் கோயிலின் உச்சியில் சிவப்பு நிற கொடி யொன்று பறந்துகொண்டிருந்தது. அரேபிய வீரர்கள் அதனை தாக்கி கொடி மரத்தினையும், கொடியினையும் தரையில்

வீழ்த்தினர். இதனை கண்ணுற்ற இந்துக்கள் கடுங்கோபம் கொண்டனர். அரேபிய வீரர்கள் தீபால் படைகள் மீது திடீர் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் தாகீர் (Dohir) பெரும் அதிர்ச்சியடைந்தார். இந்தியர்கள் அரேபியர்களை எதிர்த்து தீரமுடன் போராடினர். இருப்பினும் அவர்களால் வெற்றிபெற இயலவில்லை. அரேபியர்கள் தீபால் நகரைக் கொள்ளையடித்தனர். ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கொலை, கொள்ளையிடுதல் போன்ற தீச்செயல்கள் சுமார் மூன்று தினங்கள் வரை நீடித்தது. தீபால் நகரின் கவர்னர் அரேபியர்களைக்கண்டு அஞ்சி நகரைவிட்டு வெளியேறிவிட்டார். முகம்மது பின் குவாஸிம் தீபால் நகரை எளிதில் கைப்பற்றினார். அங்கு ஓர் மசூதியையும், முகமதிய வீரர்கள் தங்கும் பொருட்டு பல வீடுகளையும் கட்டினார். இஸ்லாம் சமயத்திற்கு மாறுவதற்கு மறுத்த அந்நகரில் வாழ்ந்த 17-வயதிற்கு மேற்பட்டோர் அனைவரும் படுகொலை செய்யப்பட்டதாக ஃபெரிஷ்டா என்பவர் குறிப்பிட்டுள்ளார். பெரும் அளவிலான கொள்ளைப்பொருள் முகமதுபின் குவாஸிமின் கையில் சிக்கியது. கொள்ளைப் பொருளில் $\frac{1}{5}$ பகுதியையும், 75 அழகிய பெண்களையும் இராக்கின் கவர்னரான ஹாஜாஜிற்கு அனுப்பி வைத்தார். மீதமிருந்த கொள்ளைப் பொருள்களை போர் வீரர்கள் தங்களிடையே பகிர்ந்து கொண்டனர்.

தீபால் நகரைக் கைப்பற்றியபின் முகமதுபின் குவாஸிம் தனது படைகளுடன் நீருன் (Nirun) நகரை நோக்கி முன்னேறினார். நீருன் நகர மக்கள் எதிர்ப்பு ஏதுமின்றி சரணடைந்தனர். அதன் பின்னர் சிந்து நதியைக் கடக்கும் பொருட்டு எண்ணற்ற படகுகளைக் கட்டுமாறு தன்னுடைய வீரர்களைப் பணித்தார். முகமதுபின் குவாஸிம் சிந்துநதியைக் கடந்து தாகீரின் படைகளைத் தாக்கினார். எதிர்பாரா இத்தாக்குதலைக் கண்டு தாகிர் பேரதிர்ச்சியுற்றார். அரேபியர்கள் தாகீரின் களிறுகள் கூட்டத்தை கடுமையாகத் தாக்கினர். கடும் சமர் நடைபெற்றதால் கணக்கற்ற வீரர்கள் கொல்லப்பட்டனர். யானையின் மீதமர்ந்திருந்த தாகிர் பின்னர் கீழே இறங்கி போரிடலானார். யானையின்மீது போடப்பட்டிருந்த அம்பாரியின்மீது (howdah) நாப்தலின் பூசிய அம்பொன்று பாய்ந்ததால் தீப்பற்றி எரியத் துவங்கிற்று. இதனால் தாகீரின் யானை போர்க்களத்தினின்றும் ஓடத்துவங்கிற்று. அச்சமயம் அரேபிய வீரர்கள் தாகீரை சூழ்ந்துகொண்டு கடுமையாகத் தாக்கினர். அரேபிய வீரன் ஒருவன் தாகீரின் தலையையும் துண்டித்து விட்டான். இதனால் கடுங்கோபமுற்ற இந்திய வீரர்கள் அரேபியர்களைக் கடுமையாகத் தாக்கினர். இருப்பினும் இந்திய வீரர்கள் வெற்றிபெற இயலவில்லை. தாகீரின் மனைவி ராணிபாயும், மகன் ஜயசிங்கும் ரேவார் கோட்டைக்குள்

ஒளிந்துகொண்டனர். தான் தப்பிச் செல்வது கடினமென்பதை உணர்ந்த ராணி, தனது தோழியர்களுடன் தீக்குளித்தாள். முகமது பின் குவாஸிம் கோட்டையைக் கைப்பற்றிய பின் 6000 இந்துக்களை இரக்கமின்றி கொன்றார். பின்னர் தாகீரின் சொத்துக்கள் அனைத்தையும் இவர் கைப்பற்றிக் கொண்டார்.

வெற்றி பூரிப்புடன் முகமது பின் குவாஸிம் பிராமணாபாத்தை நோக்கி முன்னேறினார். பிராமணாபாத் மக்கள் எதிர்ப்பு ஏது மின்றி அடிபணிந்தனர். இஸ்லாம் சமயத்திற்கு மாறியவர்கள் ஜெஸியாவரியினின்றும் விலக்குரிமை பெற்றனர். எதிர்ப்பு ஏதுமின்றி அடிபணிந்ததால் பிராமணாபாத் மக்களுக்கு காலிஃபா சமய சுதந்திரம் அளித்தார்.

பிராமணாபாத்தைக் கைப்பற்றியபின் முகமது பின் குவாஸிம் ஆரார் (Aror) கோட்டையைக் கைப்பற்றினார். தாகீரின் புதல்வர் களில் ஒருவரான பூஃபி அக்கோட்டையின் தலைவராயிருந்து வந்தார். வணிகர்களும், கைவினைஞர்களும், குவாஸிமிடம் சரண டைந்தனர். ஆராரைக் கைப்பற்றியபின் முகமதுபின் குவாஸிம் மூல்தானைக் கைப்பற்றினார். அரேபியர்கள் அவர்களுக்குப்பின் இந்தியாவின்மீது படையெடுத்த துருக்கியர்களைப் போல் அவ்வளவு கொடியவர்களன்று.

## முகமதுபின் குவாஸிமின் மறைவு :

சிந்துவில் எளிதாகப் பல வெற்றிகளைப்பெற்ற முகமதுபின் குவாஸிம் எதிர்பாராத சில காரணங்களினால் வெகுவிரைவில் உயிர் நீத்தார். மின்னல் வேகத்தில் முன்னேறிய குவாஸிம் ஓர் எரி நட்சத் திரத்தைப் போன்று வெகு விரைவில் வீழ்ச்சியுற்றார். முகம்மதுபின் குவாஸிம் தாகீரின் புதல்விகளான பர்மால்தேவி, சுராஜ்தேவி ஆகி யோர் இருவரையும் காலிஃபாவின் அந்தப்புரத்திற்கு அனுப்பி வைத்தார். இப்பெண்களை அனுப்பி வைத்தால் காலிஃபா களிப் படைந்து தனக்கு பதவி உயர்வளிப்பாரென்று முகமதுபின் குவா ஸிம் எண்ணினார். பதவி உயர்வுபெற நினைத்த குவாஸிம் தன்னையே பலிகொடுக்க நேர்ந்தது. தங்கள் ஆருயிர் தந்தை தாகீரை கொன்றுவிட்ட அப்படைத்தளபதிமீது பழி தீர்த்துக் கொள்ள அப்பெண்மணிகள் விரும்பினர். தங்கள் இருவரையும் முகமதுபின் குவாஸிம் தனது பாசறைக்குள் மூன்று தினங்கள் வரை தங்க வைத்து தகாதமுறையில் நடந்து கொண்டதாக அப்பெண் மணிகள் காலிஃபாவிடம் கூறினர். கற்பழிக்கப்பட்ட அக்காரிகை களையல்லவா அக்கயவன் தன்னிடம் அனுப்பிவைத்துள்ளான் என்று காலிஃபா கடுங்கோபங் கொண்டார். முகமதுபின் குவாஸிமை புதிதாக உரித்தெடுத்த காளையின் தோலிற்குள் வைத்து கட்டி,

நன்றாக தைத்து தம்மிடம் அனுப்பி வைக்குமாறு காலிஃபா கட்டளைப் பிறப்பித்தார். குற்றமற்ற குவாஸிமை காளையின் தோலில் வைத்து தைத்து ஓர் பேழையில் வைத்து காலிஃபாவிடம் கொண்டுவந்தனர். தாகீரின் புதல்வியர்களின் முன் அப்பேழைத் திறக்கப்பட்டது. குவாஸிமின் மறைவுகுறித்து அப் பெண்மணிகள் பெருமகிழ்ச்சி யடைந்தனர். ஆனால் பின்னர், குவாஸிம் குற்ற மற்றவரென்றும், அவர்மீது பழிதீர்த்துக் கொள்ளவேண்டுமென்ற நோக்குடன் வேண்டுமென்றே அவ்வாறு பொய் பேசியதாகவும் அப்பெண்கள் கூறினர். குற்றமற்ற குவாஸிமைக் கொன்று விட்டோமே என்று காலிஃபா மனம் குமுறினார். களங்கமில்லா காளையராகிய குவாஸிமைக் கொன்றுவிட்ட குற்றத்திற்காக மனம் கலங்கினார். கோபம் கொண்ட காலிஃபா அக்காரிகைகள் இரு வரையும் பரியின் வால்களில் நன்றாக இருகக்கட்டி அவர்கள் உயிர் துறக்கும்வரை கடும்வேகத்தில் விரட்டிக்கொண்டேயிருக்குமாறு வீரர்களிடம் பணித்தார். இளவரசிகளை இழுத்துக்கொண்டு அப்பரிகள் காடு மேடெல்லாம் ஓடியதால் அக்கன்னியர்கள் இருவரும் காயமுற்று உயிர் நீத்தனர்.

## அரேபியர்கள் சிந்துவில் குடியேறுதல் :

சிந்து சமவெளிப்பகுதி வளப்பமிகுந்திருந்தக் காரணத்தால் அரேபியர்கள் அப்பகுதியில் குடியேறலாயினர். அரேபியர்கள் வட இந்தியாவில் பல இடங்களைக் கைப்பற்றியிருந்தக் காரணத்தால் அப்பகுதிகளை நேரடியாக ஆட்சி செலுத்துவது கடினமாகத் தோன் றிற்று. அதனால் சில இடங்களை ஜாகீர்தார்களின் பொறுப்பில் விட்டு அவர்களிடமிருந்து கப்பம் பெற்றுவந்தனர். இந்துக்களில் பலர் அரேபியர்களிடம் அதிகாரிகளாய் பணியாற்றினர். முகமதிய வீரர்கள் விவசாய வேலைகளில் ஈடுபட தேவையில்லையாதலால், விவசாய வேலைகள் அனைத்தையும் இந்துக்களே கவனித்து வந்தனர். இப்பணிகளில் ஈடுபட்டிருந்த இந்துக்களில் பலர் அடிமை களைப்போல் வறுமையுற்ற நிலையில் காணப்பட்டனர்.

அரேபிய வீரர்களுக்கு ஓர் குறிப்பிட்ட ஊதியம் அளிக்கப் பட்டது. இவர்கள் இந்தியாவில் தங்கி இந்துப் பெண்களை மணந்து கொண்டனர். முகமதிய வீரர்கள் தங்கும் பொருட்டு பல காலனிகள் கட்டப்பட்டன. இத்தகைய காலனி ஜுனுத் (Junud) என்றழைக்கப்பட்டது. சில இடங்களில் இத்தகைய காலனிகள் பெருமளவில் கட்டப்பட்டதால் அவைகள் பெரும் நகரங்களாகவும் மாறின. இத்தகைய நகரங்கள் கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் பெயர் பெற்ற இடங்களாய் விளங்கின. முகமதி யர்கள் ஆடம்பரமான வாழ்க்கையை நடத்த துவங்கியதால் அவர் கள் போர் புரியும் ஆற்றலைஇழந்தனர்.அவர்களில் பலர்சோம்பேறி

களாய் மாறிவிட்டக்காரணத்தால், படையெடுப்புகளுக்கு கூலிப் படைகளைத் தேட நேர்ந்தது. இருப்பினும் வர்த்தகத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் இந்தியப் பொருட்களை சிந்துவின்வழியாக துருக்கி, கோரசான், கான்ஸ்டான்டினோபிள் ஆகிய இடங்களுக்கு கொண்டு சென்றனர். அரேபிய குதிரைகள் சிந்துவிற்கு இறக்குமதி செய்யப் பட்டன.

அரேபியர்கள் இந்துக்களுக்கு சமய சுதந்திரம் அளித்தனர். இந்துக்களை இஸ்லாம் சமயத்திற்கு மாற்றுவது கடினமென்பதை உணர்ந்து இந்துக்களுக்கு சமய சுதந்திரம் அளித்தனரேயன்றி, இந்து மதத்தின் மீதான மதிப்பினாலன்று, ஒரு சில இந்துக்கோயில் களையும் அவர்கள் தகர்த்தெரிந்தனர்.

நிலவரியும், ஜெஸியாவுமே அரசின் முக்கிய வருமானங் களாகும். விளைச்சலில் $_5$ பகுதி வரியாக விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டது. அரேபியர்கள் பிற்காலத்தில் ஜாட்டுகளை (Jats) கொடுமைப்படுத்தத் துவங்கினர். அரேபிய ஆளுநரை ஜாட்டுகளின் தலைவர் காணவந்தால் தன்னுடன் ஓர் நாயினையும் கொண்டுவருதல் வேண்டும். பழுக்கக்காய்ச்சிய இரும்பினால் அவர்களது கரங்களிலும் இலேசாக சூடுபோடப்பட்டது. ஜாட்டுகள் நல்ல ஆடைகளை அணிந்து கொள்வதற்கும், தலைப்பாகை, செருப்பு போன்றவைகளை அணிவதற்கும், குதிரை சவாரி செய்வதற்கும் அனுமதிக்கப்பட வில்லை. திருட்டுக் குற்றங்கள் பெருங்குற்றங்களாகக் கருதப்பட்டன. ஒருவரது பொருளைத் திருடிவிட்ட திருடனையும், அவனது மனைவி மக்கள் அனைவர் களையும் உயிருடன் கொளுத்திவிடுவர். இந்துக்கள் முகமதிய யாத்திரிகர்களுக்கு மூன்று நாட்களுக்கு உணவளித்து உபசரித்தல் வேண்டும். ஜெஸியா வரி கண்டிப்புடன் வசூலிக்கப்பட்டது. வரி கொடுக்க தாமதித்த இந்துக்கள் இழிவுபடுத்தப்பட்டனர், முகமதியரல்லாதார் சிம்மிகள் (Zimmis) என்றழைக்கப்பட்டனர். இந்துக்கள், முகமதியர்களுக்கிடையே எழும் வழக்குகளை விசாரிக்க தகுந்த நீதி மன்றங்களில்லை. இந்துக்களுக்கு அநீதி இழைக்கப் பட்டது.

## நிலையற்ற அரேபிய படையெடுப்பு :

அரேபியர்கள் இந்தியாவின் வடபகுதியிலுள்ள சில இடங்களைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தியபோதும் அவர்களது ஆட்சி பல ஆண்டு களுக்கு நீடிக்கவில்லை. அரேபியர்களிடையே வகுப்புவாத சச்சரவுகள் மிகுதியாக ஏற்பட்டன. இதனால் அவர்களிடையே ஒற்றுமையுணர்ச்சி குன்றியது. அரேபியர்களின் பண்பாட்டிற்கும், இந்துக்களின் பண்பாட்டிற்குமிடையே மிகுதியான வேறுபாடுகள் காணப்பட்டது. அரேபியர்களின் படையெடுப்பு இந்தியா, இஸ்லாம்

வரலாற்றில் ஓர் சிறு கதையைப் போன்றதென்றும், விளைவுகளில்லாத ஓர் வெற்றி என்றும் லேன்பூல் வருணித்துள்ளார். சிந்து மாநிலம் வளப்பம் குன்றியிருந்ததால், இம்மாநிலத்தின் மூலம் அரேபியர்களுக்கு மிகுதியான வருவாய் கிடைக்கவில்லை. பழமைப் பற்றுள்ள இந்துக்கள் அரேபியர்களை வெறுக்கத் துவங்கினர். இதனால் அரேபியர்களால் இந்தியாவில் ஓர் நிலையான ஆட்சியை ஏற்படுத்த இயலவில்லை. அரேபியர்களின் படையெடுப்பால் ஒரு சில அரசர்கள் பாதிக்கப் பட்டபோதிலும் இந்தியாவின் வட பகுதியிலும், கீழ்ப்பகுதியிலும் ஆண்டுவந்த இராஜபுத்திர அரசர்கள் தொடர்ந்து வலிமை பொருந்திய மன்னர்களாய் விளங்கினர். முகமதுபின் குவாஸிமின் மறைவிற்குப்பின் அரேபியர்களின் ஆதிக்கம் இந்தியாவில் அழியத்துவங்கிற்று. காலிஃபா வலிமையற்றவராய் மாறியதால், அயல் நாடுகளில் அவருக்கு சொந்தமாக இருந்த இடங்களில் குழப்பங்கள் ஏற்பட்டன. வெகு தொலைவிற்கப்பாலிருந்த நாடுகள் காலிஃபாவிற்கு கப்பம் செலுத்துவதை நிறுத்திவிட்டன. இங்குமங்கும் வாழ்ந்த எஞ்சிய ஒருசில அரேபிய குடும்பங்களே, அரேபியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்தார்கள் என்பதற்கு ஆதாரமாய் விளங்கின. அரேபியர்கள் தங்கள் ஞாபகார்த்தமாய் இந்தியாவில் கட்டிடங்களைக் கட்டியோ, சாலைகளை செப்பனிட்டோ செல்ல வில்லை. அரேபியர்களின் படையெடுப்பால் இந்தியர்களின் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவைகளில் ஒரு சிறிது மாற்றமே ஏற்பட்டது.

**அரேபிய படையெடுப்பால் பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள் :**

அரேபியர்களின் படையெடுப்பால் அரசியல் துறையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்படவில்லையெனினும், சமுதாயத் துறையில் ஒருசில மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியர்களின் உயரிய பண்பாடு அரேபியர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இந்திய தத்துவ ஞானிகளின் போதனைகளைக் கேட்டு பெரிதும் வியப்புற்றனர். கடவுள் ஒருவரே என்ற இஸ்லாம் சமயத்தின் கோட்பாட்டை இந்திய முனிவர்களும், தத்துவ ஞானிகளும் முன்பே நன்கு உணர்ந்திருந்தனர். இந்திய பாடகர்கள், கட்டிடக்கலை நிபுணர்கள், ஓவியர்கள் ஆகியோர்களின் வலிமையை அரேபியர்கள் பெரிதும் பாராட்டினர். காலிஃபா ஹருன் என்பவரின் நோயைக் குணப்படுத்த இந்திய மருத்துவர் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். அரசாங்க நிர்வாக முறைகளைப்பற்றி அரேபியர்கள் இந்தியர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். அரேபியர்கள் பிராமணர்களை நிர்வாக அதிகாரிகளாய் நியமித்திருந்தனர். தத்துவம், கணிதம், மருத்துவம், இரசாயனம், வானநூல் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த கருத்துக்களை அரேபியர்கள் இந்தியர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். இந்துக்களிடமிருந்து எண்ணிக்கை முறையை (Numerical figures) கற்றனர். இந்திய மருத்துவர்கள் பாக்தாத்திலுள்ள மருத்துவ மனைகளில் தலைமை மருத்துவர்களாய் நியமிக்கப்பட்டனர். இந்திய கல்விமான்களை அழைத்து சமஸ்கிருத மொழியிலுள்ள நூல்களை அரேபிய மொழிக்கு மொழி பெயர்க்கும்படி கூறினர்.

# 19. கஜினி முகமது

**(MUHAMMAD OF GAZNI, AD 998 - 1030)**

அராபியர்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சிந்துவைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினர். கி.பி. 871 வரை அது அராபிய மாகாணமாகவே இருந்து வந்தது. ஆனால் இஸ்லாமியப் பேரரசில் அப்பாசிட் கலீபாக்களின் அதிகாரம் குறையத் துவங்கியவுடன், சிந்துவிலும் முகமதியராட்சி தளர்ச்சி யடைந்தது. மூல்தானும், மன்சிராவும் தவிர ஏனையப் பகுதிகள் இஸ்லாமியப் பேரரசுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டன. இந்த நிலையில் மீண்டும் இந்தியாவின் மீது படையெடுத்து வட இந்தியாவிலும் மேற்கு இந்தியா விலுமிருந்த இந்து அரசர்களைத் தோற்கடித்து முகமதியர் ஆட்சி உறுதியாக இந்தியாவில் நிறுவப்படுவதற்கு வழிகோலியவர்கள் கஜினியை ஆண்ட சுல்தான்கள் ஆவர். அவர்களில் கஜினி முகமது சிறந்த சுல்தானாகக் கருதப் படுகிறார்.

## கஜினி முகமது பதவிக்கு வருதல்:

அப்பாசிட் காலிப்புகளின் அதிகாரம் குறைந்தவுடன், பல சுதந்திர மாகாணங்க்ள் உருவாயின. கி.பி. 962-ல் ஆப்கானிஸ்தானத்தில் கஜினி என்ற சிறிய பகுதிக்கு அலப்டஜின் என்ற துருக்கியர் தலைவரானார். அலப்டஜின் கி.பி. 963-ல் இறக்கவே அவருடைய மகன் இஸ்ஹாக் அரியணை ஏறினார். பின்னர் பல்காடிஜின் பிராய் ஆகியோர் ஆண்டனர். கி.பி. 976-ல் சபக்டஜின் என்பவர் கஜினியின் சுல்தானானார். இவர் கி.பி. 997 வரை ஆட்சி புரிந்தார். சபக்டஜின் மரணத்திற்குப் பின் கி.பி. 998-ல் கஜினியின் சுல்தானாகப் பதவி ஏற்றார் முகமது.

## சுல்தான் கஜினி முகமது:

சுல்தான் முகமது கி.பி. 971-ல் பிறந்தார். சிறு வயதிலிருந்தே முறையாகக் கல்வி பயின்றார். தனது தந்தையைப் போன்றே போர்க் கலையிலும் ஆட்சியிலும் சிறப்பாக விளங்கினார். தன்னுடைய தந்தை ஆண்ட காலத்திலேயே பல போர்களில் ஈடுபட்டார். திருக்குரானையும், இஸ்லாமிய சமய நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். இவர் கி.பி. 998-ல் அரியணை ஏறிய போது ஆப்கானி ஸ்தானமும், கிழக்குப் பாரசீகப் பகுதியான குராசனும் மட்டுமே கஜினியின் கீழ் இருந்தது. இவர் கலிபாவினால் சுல்தானாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். முகமது பல வெற்றிகள் பெற்று ஆட்சிப் பரப்பை அதிகப்படுத்தியதால், காலீபு அவருக்கு 'யாமின் உத்தௌலா', 'அமீன் உல்முல்லா' ஆகிய பட்டங்களை

வழங்கினார். முகமது தனக்கு அளிக்கப்பட்ட விருதைப் பெற்றுக் கொண்டு 'ஆண்டு தோறும் இந்தியாவின் மீது படையெடுத்து அங்குள்ள இஸ்லாம் அல்லாதவரை வென்று இஸ்லாமை நிலைப்படுத்துவேன்' என்று உறுதிபூண்டார்.

அதன்படி இந்தியாவின் மீது தான் ஆண்ட இருபத்தேழு ஆண்டு காலங்களில் பதினேழு முறை படையெடுத்தார். அவற்றில் பெரும்பான்மை படையெடுப்புகளில் வெற்றி பெற்றார். பெரும் பாலான படையெடுப்புகளை கொள்ளையடிப்பதற்காகவே மேற்கொண்டார். காரணம் தனது அண்டை நாட்டவருடன் போரிட்டதில் பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டது. எனவே தான் இழந்த செல்வத்தை மீட்பதற்குச் செல்வமிக்க நகரங்கள் மீதும், ஆலயங்கள் மீதும் தாக்குதல்கள் நிகழ்த்தினார். அவர் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயலவில்லை. பஞ்சாபைத் தவிர வேறு எந்த பகுதியையும் தன் நாட்டோடு இணைத்துக் கொள்ளவில்லை. ஆனால் இஸ்லாமிய வரலாற்றாசிரியர்களோ கஜினி முகமதுவின் படையெடுப்புகளை ஜிகாத் அல்லது சமயப்போர்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

## இவரது படையெடுப்பின் போது வட இந்தியநிலை:

கஜினி முகமது வட இந்தியாவில் படையெடுத்த போது அங்கே பலவகைப்பட்ட வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களிடையே ஒற்றுமையில்லை. அடிக்கடி தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர். அவர்களுடைய படை பலவீனமானதாக இருந்தது. ஷாஹி குலத்தவர் ஆட்சி காஷ்மீரிலிருந்து மூல்தான் வரை பரவியிருந்தது. காபூல், பெஷாவர், ஒகிந்து, லாகூர் ஆகிய பெரிய நகரங்கள் ஷாஹி ஆட்சியின் கீழ் இருந்தது. மூல்தானில் அராபியராட்சி இருந்தது. மன்சூராவிலும் ஓர் அராபிய குலத்தினரே ஆண்டு வந்தனர். டில்லியை தோமாரர்களும், கன்னோசியையும் காசியையும் பிரதிகாரர்களும், மகோபாவையும் கலிஞ்சாரையும் சாந்தலர்களும், மாளவத்தைப் பாரமாரர்களும், கூர்சரத்தை சோலங்கியரும் ஆட்சி செய்தனர். இவர்களில் பெரும்பாலோர் இராஜபுத்திர மரபைச் சார்ந்தவர்கள்.

இந்த மரபினர் வீரமிக்கவர்களாக இருந்தாலும், ஒருவரை யொருவர் பகைத்துக் கொண்டு, மக்கள் நலன்களைப் புறக்கணித்தனர். நாட்டு வருமானம் முழுவதும் படை நிர்வாகத்திற்கே செலவிடப்பட்டது. மக்கள் பல துன்பங்கள் அடைந்தனர். அரசர்கட்கிடையே ஒற்றுமை யின்மையும், அரசர்கள்மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும் கஜினி முகம்துவுக்கு வெற்றியைத் தேடித்தந்தன.

## முதல்படையெடுப்பு (கி.பி. 1000):

கி.பி 1000-ல் கஜினி முகமதுவின் முதல் இந்தியப் படையெடுப்பு துவங்கியது. பெஷாவருக்கு அருகிலுள்ள பல கோட்டைகள் கைப்பற்றப் பட்டன.

## இரண்டாம் படையெடுப்பு (கி.பி.1001):

தனது இரண்டாவது படையெடுப்பின் போது தனது தந்தையின் எதிரியான உதபாண்டாவைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த ஷாஹி அரசரான பதிந்தா நாட்டு ஜெயபாலரை எதிர்த்து படையுடன் சென்றார். ஜெயபாலர் ஓர் ஜாட் இனத்தவர் சபக்டிஜன் ஜெயபாலருடன் நான்கு முறை போர் தொடுத்திருந்தார்.

கஜினி முகமதுவின் வருகையை அறிந்த ஜெயபாலரும் ஒரு பெரும்படையைத் திரட்டினார். இரண்டு படைகளும் பெஷாவருக்கு அருகில் கடுமையாகப் போரிட்டன. ஜெயபாலர் தோற்கடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். அவருடைய மகனும் பேரன்களும் பிணையக் கைதிகளாக்கப் பட்டனர். அவமானம் தாங்காமல் ஜெயபாலர் தீக்குளித்து இறந்தார். பெஷாவர் மாநிலம் முழுவதும் முகமது வசமாயிற்று. இப்படையெடுப்பில் கைப்பற்றப்பட்ட எண்ணற்ற கொள்ளைப் பொருட்களுடன் கஜினிக்குத் திரும்பினார் முகமது. இப்போரினால் கிடைத்த செல்வங்கள் இந்தியாவின் மீதான இவரது அடுத்த படையெடுப்புக்கு வழிவகுத்தது.

## மூன்றாம் படையெடுப்பு (1004):

இரண்டாம் படையெடுப்பில் பெருஞ்செல்வத்தைப் பெற்ற முகமது கி.பி. 1004-ல் மீண்டும் இந்தியாவின் மீது படையெடுத்தார். பாட்டியா என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தபாஜிராய் என்பவர் மீது போர் தொடுக்கப்பட்டது. போரில் பாஜிராய் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். ஏராளமான கொள்ளைப் பொருட்களுடன் கஜினிக்குத் திரும்பினார். வழியில் மூல்தான் பகுதியை ஆண்டுவந்த அபுல்பத்தாவூது என்பவர் முகமதுவின் படையைத் தாக்கினார். இதுவே முகமதுவின் நான்காவது படையெடுப்பிற்குக் காரணமானது.

## நான்காம் படையெடுப்பு: (1005-1006)

மூல்தான் பகுதியை ஆண்டுவந்த தாவூது மீது இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. தாவூது சன்னிபிரிவுகளை விட்டு விட்டு, இஸ்மாயிலி பிரிவில் சேர்ந்ததால் இப்படையெடுப்பு ஏற்பட்டதாக

சொல்லப்படுகிறது மூல்தானை நோக்கி முன்னேறிய படைகள் ஆனந்தபாலரின் பிரதேசம் வழியாக செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. எனவே முகமது ஆனந்தபாலரைத் தோற்கடித்து விரட்டிவிட்டு, பின்னர் மூல்தானை நோக்கி முன்னேறினார். ஆனால் தாவூது, மீண்டும் சன்னிப்பிரிவுக்கு மாறுவதாகவும், கப்பம் கட்டுவதாகவும் வாக்களித்து சமாதானம் செய்து கொண்டார்.

## ஐந்தாம் படையெடுப்பு:(கி.பி.1007)

பதிந்தா நாட்டு மன்னரான ஜெயபாலரின் பேரன் சுகபாலன், நவாசா என்ற இஸ்லாமியப் பெயருடன் சில பகுதிகளை ஆட்சி செய்து வந்தார். இஸ்லாமியத்துக்கு முகமதுவால் கட்டாய மதமாற்றம் செய்யப் பட்டார் சுகபாலன். முகமது கொராசான் மீது படையெடுத்த போது, சுகபாலன் தன்னைச் சுதந்திரமாக்கிக் கொண்டார். எனவே தான் இந்தப் படையெடுப்பு மூலம் சுகபாலன் தோற்கடிக்கப்பட்டு அவர் செல்வம் முழுவதையும் கவர்ந்து சென்றார் முகமது.

## ஆறாம் படையெடுப்பு: (கி.பி. 1008)

மூல்தான் படையெடுப்பின் போது அனுமதி மறுத்த ஆனந்த பாலரைத் தண்டிப்பதற்கே இந்தப் படையெடுப்பு. முகமதுவின் இப்படையெடுப்பை அறிந்த ஆனந்த பாலர் உஜ்ஜயினி, குவாலியர் கலிஞ்சார், கன்னோசி, டெல்லி, ஆஜ்மீர் முதலிய பகுதிகளைச் சேர்ந்த அரசர்களுக்கு அழைப்புவிடுத்து, பொது எதிரியைத் தாக்க ஒன்று சேர்ந்து உதவுமாறு வேண்டினார். பல அரசர்கள் உதவி செய்தார்கள். ஆனாலும் நடைபெற்ற கடும்போரில் ஆனந்தபாலர் தோற்கடிக்கப்பட்டார். கோட்டையில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட பெருந்திரளான பொன்னும், மணியும் கொள்ளையிடப்பட்டன. இப்பெருஞ்செல்வத்தடன் கஜினி நகரம் திரும்பினார் முகமது. தோல்வியடைந்த ஆனந்தபாலர் ஆண்டு தோறும் கப்பம் கட்டுவதாக வாக்குறுதி கொடுத்தார்.

## ஏழாம் படையெடுப்பு (கி.பி. 1009):

கி.பி. 1009-ல் இராஜபுதனத்திலுள்ள நாராயணப்பூர் என்ற நகரம் மீது கஜினி முகமது படையெடுத்தார். அந்த நாட்டு அரசனைத் தோற்கடித்து நாராயணப்பூரை கைப்பற்றினார். அங்குள்ள ஆலயங்களை உடைத் தெறிந்து, செல்வங்களைக் கொள்ளையிட்டு கஜினி திரும்பினார்.

## எட்டாம்படையெடுப்பு (கி.பி. 1010):

மூல்தானை ஆண்ட தாவூது ஒழுங்காக கப்பம் கட்டாததாலும், மீண்டும் இஸ்மாயிலி பிரிவுக்கு ஆதரவு தர முற்பட்டதாலும் மூல்தான் மீது படையெடுத்து தாவூதைத் தோற்றடித்துச் சிறைப்படுத்தினார் முகமது.

## ஒன்பதாம் படையெடுப்பு (கி.பி. 1013):

ஆனந்தபாலர் கி.பி. 1012-ல் இறந்தபின்பு அவருக்குப்பின் வந்த அவரது மகன் திரிலோசனபாலர் கப்பம் ஒழுங்காகச் செலுத்தவில்லை. எனவே அவருடைய தலைநகரான நந்தனம் முற்றுகையிடப்பட்டது. திரிலோசனபாலர் தோற்கடிக்கப் பட்டார். முகமது நந்தனம் கோட்டைக்குள் புகுந்து பெருமதிப்புடைய பொருட்களை கைப்பற்றினார்.

## பத்தாவது படையெடுப்பு (கி.பி 1014):

கி.பி 1014-ல் செல்வத்திலும் புகழிலும் ஓங்கியிருந்த தானேஸ்வரம் மீது படையெடுத்தார் கஜினி முகமது. தானேஸ்வரம் பிடிக்கப்பட்டது. அந்த நகரிலிருந்து சக்கரசுவாமி ஆலயம் கொள்ளையிடப்பட்டது. ஆலயத்திலிருந்து விக்கிரகங்கள் உடைக்கப்பட்டன.

## பதினோராம் படையெடுப்பு (கி.பி. 1015):

கி.பி. 1015-ல் காஷ்மீரத்தின் மீது கஜினி முகமது படையெடுத்தார். அப்பகுதியிலிருந்த லோகாத் என்ற மலைக்கோட்டை முற்றுகையிடப் பட்டது. ஆனால் கடும் எதிர்ப்பாலும், பனிமழை காரணமாகவும் கஜினி முகமது பின் வாங்கினார். அவருடைய படை வீரர்கள் பலர் உயிரிழந்தனர். இந்தியப் படையெடுப்பில் கஜினி முகமதுவின் முதல் தோல்வி இதுவே.

## பன்னிரெண்டாம் படையெடுப்பு (கி.பி. 1018) :

வலிமைமிக்க பெரும்படை ஒன்றை திரட்டிக் கொண்டு கி.பி. 1018-ல் கிருஷ்ணாவின் புனித நகரமாகிய மதுராவைத் தாக்கினார் முகமது. மதுரா நகரின் ஆலயங்கள், மாளிகைகள், பிருந்தாவனம் ஆகியவை பெருத்த நாசத்திற்கு உள்ளாயின. எவ்வித எதிர்ப்பும் இன்றி மதுரா தரைமட்டமாக்கப்பட்டது. நிறையத் தங்கமும், வெள்ளியும் கிடைத்தன. பின்னர் கன்னோசி நகர் மீது படையெடுத்து, அங்கும் கொள்ளையடிக்கப் பட்டு ஏராளமான செல்வங்களை எடுத்துக் கொண்டு நாடு திரும்பினார். கன்னோசி மன்னர் இராஜ்யபாலர் நாட்டை விட்டு ஓடினார்.

## பதின்மூன்றாம் படையெடுப்பு (கி.பி. 1021):

கன்னோசியை விட்டு ஓடிப்போன இராஜ்யபாலரை சாந்தல்ல நாட்டு அரசர் வித்யாதரர் என்பவர் போர்தொடுத்துக் கொன்றார். எனவே வித்யாதரனைத் தண்டிக்கும் பொருட்டு முகமது படையெடுத்தார். வழியில் ஷாஹி அரசரைத் தோற்கடித்தார். பின்னர் சாந்தல்ல அரசுக்குள் முகமதியப் படை நுழைந்தது. வித்யாதரர் அப்படையைக் கண்டு அஞ்சி ஓடிப் போய்விட்டார். சாந்தல்ல அரசு கொள்ளையிடப்பட்டது.

## பதினான்காம் படையெடுப்பு (கி.பி. 1022):

காஷ்மீரத்திலுள்ள லோகோட்டின் மீது மீண்டும் படையெடுத்தார். லாகூர் பிடிக்கப்பட்டு கஜினியுடன் இணைக்கப்பட்டது. இங்குள்ள இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன.

## பதினைந்தாம் படையெடுப்பு (கி.பி. 1023):

சாந்தல்ல அரசன் வித்யாதரனைத் தண்டிக்கும் பொருட்டு மீண்டும் படையெடுத்தார். அவ்வாறு வரும்போது குவாலியர் கோட்டையைத் தாக்கினார். பின்னர் கலிஞ்சார் கோட்டையைத் தாக்கினார். முற்றுகை பலநாள் நீடித்தாலும் அதனைக் கைப்பற்ற முடியவில்லை. எனவே வித்யாதாரரிடமிருந்து சில பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு திரும்பினார். முகமதுவின் இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்தது.

## பதினாறாம் படையெடுப்பு (கி.பி. 1026):

கஜினி முகமதுவின் இந்தப்படையெடுப்பு குறிப்பிடத்தக்க படையெடுப் பாகும். கத்தியவார் கடற்கரையில் அமைந்துள்ள சோமநாதர் ஆலயம் இந்தியாவிலேயே செல்வவளம் பெற்ற ஆலயம். பெரும் படையுடன் 1026-ல் சோமநாதபுரத்தை அடைந்தார் முகமது. சுமார் ஐயாயிரம் பேர் அவர் வாளுக்கு இறையாயினர். கோயில் சூறையாடப் பட்டது. பெயர் பெற்ற லிங்கத்தை அழித்தார். பிற சிலைகளும் அழிக்கப்பட்டன. கொள்ளையிட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு கஜினிக்கு திரும்பினார். திரும்பும்போது ஜாட் இனத்தவரால் தாக்கப்பட்டு பெருஞ்சேதம் ஏற்பட்டது.

## பதினேழாம் படையெடுப்பு (கி.பி. 1027):

சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையிட்டுத் திரும்பும் போது தன்னைத் தாக்கிய ஜாட்டுகளைப் பழிவாங்கவே இந்தப்படையெடுப்பு. இதில் எண்ணற்றவர் கொல்லப்பட்டனர். அந்த இனத்தவர் ஒளித்து வைத்திருந்த செல்வத்தையெல்லாம் கொள்ளையடித்து விட்டு கஜினிக்குத் திரும்பினார். இதுவே இவரது கடைசிப் படையெடுப்பாகும். அதன் பின் கி.பி. 1030-ல் தனது 59-ம் வயதில் கஜினி முகமது காலமானார்.

## மதிப்பீடு:

இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் கஜினிமுகமது முக்கியமான இடத்தை வகிக்கிறார். வடமேற்கு இந்தியாவில் அவர் நிறுவிய ஆட்சி மிகவும் விரிவானது மட்டுமின்றி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும் தொடர்ச்சியான அவருடைய தாக்குதல்களினால், இந்தியாவில் பல

நகரங்கள் அழிந்தது. மதிப்பிட முடியாத அளவுக்கு விலை மதிப்பற்ற பொருட்கள் கவர்ந்து செல்லப்பட்டன. இதனால் இந்தியாவின் செல்வ நிலை குன்றியது. இந்திய அரசர்களின் வீழ்ச்சிக்கும் வழிவகுத்தது. இப்படிப்பட்ட வலிமையிழந்த இந்து அரசர்களைத்தான் கோரி முகமது எளிதாக வென்றார்.

கஜினிமுகமது ஓர் சிறந்த தளபதி. இவருடைய வெற்றிக்கு அச்சமின்மை, ஆற்றலுடைமை, தன்னுறுதி, போர்த்திறம், போர்த்தந்திரம் ஆகியவையே காரணம். ஏராளமான போர்களில் ஈடுபட்டும் தோல்வி கண்டதில்லை. பொருளாசையால் தான் இவர் கோயில்களைக் கொள்ளையிட்டார். இந்தியாவிலிருந்து கொள்ளை அடித்துச் சென்ற பொருட்களைக் கொண்டு கஜினி நகரத்தை அழகுபடுத்தினார். பல அறிஞர்கள் இவரால் ஆதரிக்கப்பட்டனர். பிர்தௌசி என்பவர் கஜினிமுகமதுவின் வாழ்க்கை வரலாற்றை 'ஷாநாமா' என்ற நூலில் பாரசீக மொழியில் காப்பியமாக வரைந்தார். அக்காலத்தில் வாழ்ந்த பேரரசர்களுள் கஜினி முகமதுவும் ஒருவர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

# 20. கோரிமுகமது

## (MUHAMMAD OF GHORE, 1173 - 1206)

கஜினிக்கும் ஹீரட்டிற்கும் இடைப்பட்ட மலைப்பிரதேசத்தில் உள்ள சிறிய அரசுதான் கோரி அரசு. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் கோரி அரசு கஜினியின் ஆட்சிக்குட்பட்டு இருந்தது. ஆனால் கஜினி முகமதுவின் மரணத்திற்குப் பின்னர், கஜினி அரசு பலவீன மடைந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு பல நகரங்கள் சுதந்திர மடைந்தன. அதில் கோரியும் ஒன்று. இந்த மரபினர் வேகமாக வளர்ச்சி யடைந்தனர். 1155-ல் கோரியை ஆண்ட அலாவுதீன் உசேன் என்பவர் கஜினியைத் தாக்கி கொள்ளையடித்து, அதனைத் தீக்கிரையாக்கினார். அதன் பின் 1161-ல் அலாவுதீனின் மகன் சைபுதீன் கோரி நகரில் அரியணை ஏறினார். 1163ல் அவரது மகன் மரணமடையவே கியாசுதீன் கோரியின் சுல்தானாக ஆனார். இவர் 1173-ல் கஜினி நகரத்தைக் கைப்பற்றித் தன் தம்பியான ஷிகாபுதீன் முகமதுவுக்கு கொடுத்து அதன் சுல்தானாக்கினார். இந்த ஷிகாபுதீன் தான், முய்சுதீன் முகமது அல்லது கோரி முகமது எனப்பட்டார். 1203-ல் தன் அண்ணன் இறக்கவே கோரிக்கும் சுல்தானாகி கோரி முகமது ஆனார். கஜினி முகமதுவுக்குப் பின்னர் மிகப் பெரிய அளவில் இந்தியாவின் மீது படையெடுத்துத் தாக்கியவர் கோரி முகமது ஆவார்.

## கோரி முகமதுவின் படையெடுப்புகள்:

கோரிமுகமது தனது அண்டை நாடுகளான மாளவம், மூல்தான், பஞ்சாப் ஆகிய நாடுகளை கைப்பற்ற நினைத்தார். இந்த நாடுகளினால் தனது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படும் என்று நம்பினார். எனவே இந்த நாடுகள் மீது படையெடுத்தார். மேலும் இந்தியாவில் இஸ்லாமிய அரசை ஏற்படுத்த வேண்டும் என்று பேரவாக் கொண்டார். அப்படி நிறுவினால் வரலாற்றில் தனக்கு நல்ல பெயர் ஏற்படும் என்று நம்பினார். இக்காரணங்களாலேயே தனது இந்தியப் படையெடுப்பை ஆரம்பித்தார்.

கி.பி. 1175-ல் கர்மாத்தியர்களிடமிருந்து மூல்தானைக் கைப்பற்றினார். பின்னர் சிந்து மாநிலத்தின் வட பகுதியிலிருந்த 'உச்சா' என்ற கோட்டையைக் கைப்பற்றினார். 1178-ல் குஜராத்தைத் தாக்கினார். ஆனால் குஜராத் அரசர் இரண்டாம் சோலங்கி மூலராஜா இத்தாக்குதலை முறியடித்தார். கோரிமுகமதுவின் படைகள் வந்த வழியே திரும்பின.

## பஞ்சாபை வெல்லுதல்:

1179-ல் தனது பஞ்சாபின் மீதான படையெடுப்புகளைத் துவக்கினார். பஞ்சாபை ஆண்டு கொண்டிருந்த கஜினி வம்சத்தைச் சேர்ந்த குஸ்ரவ்மாலிக்கின் வசமிருந்த பெஷாவர் கோட்டையைப் பிடித்தார். எனவே குஸ்ரவ்மாலிக் ஏராளமான பொருளை கொடுத்தும், தன் மகனை பணையமாகக் கொடுத்தும் கோரிமுகமதுவுடன் சமாதானம் செய்து கொண்டார். ஆனால் 1185-ல் மீண்டும் பஞ்சாபின் மீது படையெடுத்தார் கோரி முகமது. தயால்கோட் கோட்டையைக் கைப்பற்றினார். பின்னர் லாகூரை முற்றுகையிட்டார். இதில் ஜம்மு அரசர் விஜய தேவர் கோரிமுகம்மதுவுக்கு உதவினார். லாகூர் பிடிக்கப்பட்டது. குஸ்ரவ்மாலிக் கைது செய்யப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டார். பஞ்சாபில் கஜினி வம்சத்தினரின் ஆட்சி முடிவடைந்தது.

## முதலாம், இரண்டாம் தரைன் போர்கள்:

இந்தியாவில் பிடிக்கப்பட்ட பகுதிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் இராஜபுத்திரர்களின் அதிகாரத்தை அடியோடு அழிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கோரி முகமது. ஆஜ்மிரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த மூன்றாம் பிருதிவிராஜரிடம் வலிமை மிக்க படை இருந்தது. 1190-ல் பிருதிவிராஜரின் முக்கியமான 'பட்டிண்டா' கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றினார். பின்னர் பிருதிவிராஜரின் படைகளும், கோரிமுகமதுவின் படைகளும் 1191-ல் டில்லியிலிருந்து ஐம்பது கல் தூரத்திலுள்ள தரைன் என்ற போர்க்களத்தில் சந்தித்தன. இது

முதல் தரைன் போர் என்றழைக்கப்படுகிறது. இப்போரில் கோரிமுகமது தோற்கடிக்கப்பட்டார். பட்டிண்டாக் கோட்டையை மீண்டும் பிடித்துக் கொண்டார் பிருதிவிராஜ்.

இதற்கு பழிதீர்க்கவே கோரிமுகமது மீண்டும் படையெடுத்து வந்தார். சிற்றரசர்களின் படையுதவியுடன் பிருதிவிராஜ் மீண்டும் போருக்கு ஆயத்தமானார். 1192-ல் தரையினில் மீண்டும் கடும்போர் நடைபெற்றது. இது இரண்டாம் தரைன் போர் எனப்படுகிறது.இப்ரோரில் பிருதிவிராஜ் தோற்கடிக்கப் பட்டுச் சிறைப்பிடிக்கப்பட்டார். பின்னர் கொலை செய்யப்பட்டார். ஆலயங்கள் அழிக்கப்பட்டு அதில் மசூதிகள் கட்டப்பட்டன.

இந்தத் தரைன் போர்கள் இந்திய வரலாற்றில் ஓர் சிறப்புக் கட்டமாகும். வலிமை பெற்ற இராஜபுத்திரர்களின் தோல்வியால் அவர்கள் வரலாற்றில் பெரிய இழுக்கு ஏற்பட்டது. இதன் பின் மிக சுலபமாக மற்ற படையெடுப்புகளை மேற்கொண்டார் கோரிமுகமது. இந்தியாவில் துருக்கியர் ஆட்சி நிலை பெறுவதற்கும், இஸ்லாமிய சமயம் இந்தியரவில் வேகமாகப் பரவுவதற்கும் வழிவகுத்தது இந்த தரைன் வெற்றி.

## குத்புதீன் ஐபக்:

தரைன் வெற்றிக்குப் பின்னர் கோரிமுகமது மேலும் முன்னேறிச் சென்று ஜான்சி, சாமானா, குஹ்ராம் ஆகிய பல முக்கியமான கோட்டைகளைக் கைப்பற்றினார். பின்னர் ஆஜ்மீர் நகரமும் கைப்பற்றப் பட்டது. இந்தியாவில் தான் கைப்பற்றிய பிரதேசங்கள் அனைத்துக்கும் தனது அடிமை தளபதியும், தன் நம்பிக்கைக்கு உரியவருமான குத்புதீன் ஐபக்கை ஆளுநராக நியமித்தார் கோரிமுகமது.

குத்புதீன் துருக்கிஸ்தானத்தைசேர்ந் ஓர் அடிமை. இளமையிலேயே அடிமையாக கோரி முகமதுவினால் வாங்கப்பட்டார். தன் திறமையின் காரணமாக, சிறிதுசிறிதாக உயர்ந்து இறுதியில் கோரிமுகமதுவின் படைத்தளபதியானார். ஐபக்கிடம் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார் கோரி முகமது.

கோரிமுகமது இந்தியாவை விட்டுச் சென்றபின், ஐபக் பல வெற்றிகள் பெற்றார். மீரட், பரன் ஆகிய கோட்டைகளைப் பிடித்தார். பின்னர் பக்கத்திலுள்ள டில்லி நகரைக் கைப்பற்ற நினைத்தார். 1193-ல் சிற்றரசர் ஒருவரிடமிருந்து அதனைக் கைப்பற்றி தனது தலைமை இடமாக்கிக் கொண்டார். இது இந்திய வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகும். அது முதல் டில்லி முக்கிய நகரமானது. ஆஜ்மீரில் ஏற்பட்ட கலவரத்தை அடக்கினார். 'கோல்' என்ற நகரத்தையும் கைப்பற்றினார்.

## கன்னோசி படையெடுப்பு:

கன்னோசியை ஆண்ட ஜெயச்சந்திரரை வென்றால் தான் முஸ்லீம்களின் ஆட்சி நிலைக்க முடியும் என்று நம்பினார் கோரி முகமது. எனவே கன்னோசியையும், காசியையும் தோற்கடித்து கங்கைச் சமவெளியில் தன் ஆதிக்கத்தை நிறுவத் திட்டமிட்டார். கி.பி. 1194-ல் கோரிமுகமதுவின் படைகளும் ஜெயச்சந்திரனின் படைகளும் சாந்தவார் என்ற இடத்தில் கடும் போர் புரிந்தன. போர்க்களத்திலேயே ஜெயச்சந்திரர் கொல்லப்பட்டார். காசி கைப்பற்றப்பட்டு அங்கிருந்த ஆயிரம் இந்துக் கோயில்களை இடித்து அதில் பல மசூதிகளைக் கட்டினார்.

## குவாலியர் வெற்றி:

1195-ல் குவாலியர் மீது படையெடுத்தார் கோரி முகமது. வழியிலிருந்த பயனா என்ற சிற்றரசைத் தோற்கடித்து, பல கோட்டைகளைக் கைப்பற்றினார். குவாலியர் கோட்டை முற்றுகை பல மாதங்கள் நீடித்தது. எனவே முற்றுகையை பகாவுதீன் துக்ரில் என்ற தன் தளபதி பொறுப்பில் விட்டுவிட்டு கஜினிக்குத் திரும்பினார். குவாலியர் சிற்றரசு தோற்கடிக்கப்பட்டு நாசம் செய்யப்பட்டது.

## ஐபக்கின் குஜரத் வெற்றி:

இராஜபுத்திர மன்னர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பகுதிகளிலிருந்து துருக்கியர்களை அடியோடு விரட்டத் திட்டமிட்டனர். ஆஜ்மீர் பகுதியிலுள்ள மெர்குலத்தவர், சாகமானர், குஜரத்தை ஆண்ட சாளுக்கியர், சௌகான் மரபினர் ஆகியோர் ஒன்று சேர்ந்து 1196-ல் ஆஜ்மீர் கோட்டையைத் தாக்கினர். டெல்லியிலிருந்து குத்புதீன் ஐபக் ஆஜ்மீர் வந்தார். அவர் தோல்வியடையும் நிலை ஏற்பட்ட போது எதிர்பாராத விதமாகக் கஜினியிலிருந்து புதிய படைகள் வந்தது. அதனால் இராஜ்புத்திர மன்னர்கள் பின்வாங்கினர். குஜரத் தோற்கடிக்கப்பட்டது. அதன் தலைநகரான அன்ஹில்வாதம் கொள்ளையடிக்கப்பட்டது. அதன் பின் ஐபக் டில்லி திரும்பினார்.

## பண்டேல்கண்ட் வெற்றி:

குஜரத் வெற்றிக்குப் பின்னர் ஐபக் பதாவூன், சந்தவார், மாளவத்தின் ஒரு பகுதி ஆகியவைகளைக் கைப்பற்றினார். பின்னர் சாந்தலர்கள் ஆட்சி புரிந்து வந்த பண்டேல்கண்ட் மீது 1202-ல்படை யெடுத்தார் குத்புதீன். அப்போது அரசராக இருந்தவர் பரமார்த்தி தேவர் என்பவர் ஆவார். சாந்தலர்களின் படைத்தளமான கலிஞ்சார் கோட்டை முற்றுகையிடப்பட்டது. இறுதியில் குத்புதீன் வெற்றி பெற்றார். கலிஞ்சார்

கோட்டை, மகாபா, கஜுராகோ ஆகிய பெயர் பெற்ற இராஜபுத்திரக் கோட்டைகள் குத்புதீன் வசமாயின.

இதே சமயத்தில் கோரி முகமதுவுடன் இந்தியாவுக்கு வந்த சாதாரணப் படைத் தலைவரான இக்தியாருதீன் முகமது பக்தியார்கில் என்பவன் கிழக்கிலிருந்து பீஹார், வங்காளம் முழுவதையும் கைப் பற்றினார். இவ்வாறு கோரி முகமதுவின் அரசு கிழக்கில் வங்காளம் வரை பரவியது.

## கோரி முகமதுவின் மரணம்:

இந்தியாவில் தான் வென்ற பகுதிகளை குத்புதீன் ஐபக்கின் பொறுப்பில் விட்டுவிட்டு தனது சொந்த நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கி அமைதியை ஏற்படுத்த முயற்சித்தார். 1205-ல் குவாரசத்தை ஆண்டு வந்த அரசனுடன் கடுமையான போரில் ஈடுபட்டார் கோரி முகமது. இப்போரில் குவாரசம் ஷாவின் படைகள் கோரி முகமதுவைத் தோற்கடித்தன. இந்தத் தோல்வி கோரி முகமதுவின் பெருமைகளை யெல்லாம் சிதறடித்தன. பல இந்திய அரசுகளும் கிளர்ந்தெழுந்தன. முக்கியமாக பஞ்சாபில் வாழ்ந்து வந்த கோர்க்கர்கள் கிளர்ச்சி செய்து பல பகுதிகளைப் பிடித்தனர். மூல்தானும் கிளர்ச்சியில் இறங்கியது.

இந்தக் கிளர்ச்சிகளை அடக்க கோரி முகம்மது ஒரு படையுடன் வந்தார். கோர்க்கர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். மூல்தான் கைப்பற்றப் பட்டது. லாகூருக்கும் சென்று அமைதியை நிலைநாட்டி விட்டு கஜினிக்குத் திரும்பினார். திரும்பும் போது வழியில் சிந்து நதிக்கரையிலுள்ள தமயக்(DhamYak) என்ற இடத்தில் 1206 மார்ச் 15-ல் எதிரிகளால் கோரி முகமது குத்திக் கொல்லப்பட்டார்.

## மதிப்பீடு:

வடஇந்தியாவில் முகமதிய ஆட்சிக்கு அடிகோலியவர்களில் கோரிமுகமது முக்கியமானவர். இவர் தனது வெற்றிகளால் ஆப்கானிஸ் தானம் முதல் வங்காளம் வரை பரந்த ஓர் பேரரசினை உருவாக்கினார். கஜினி முகமதுவைப் போலல்லாமல் இந்தியாவில் தனது பேரரசை நிறுவவேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன் செயல்பட்டார். கஜினி முகமது இந்திய அரசியலில் ஈடுபடாமல் கொலையிலும் கொள்ளை யிலுமே ஈடுபட்டார். ஆனால் கோரிமுகமது இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் படியாக இந்திய அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார். கஜினிமுகமதுவைப் போல சமய வெறியராக இவர் இல்லை. இவர் தனது படையெடுப்புகளைப் புனிதப் போராகக் கருதியதும் இல்லை.

கோரி முகமதுவின் வெற்றிகளும் சாதனைகளும் நிரந்தரமானவை. தான் கைப்பற்றிய பகுதிகளில் நல்ல நிர்வாக ஏற்பாடுகளைச் செய்து ஓர் சிறந்த ஆட்சியாளர் என்பதை நிரூபித்தார். இவருடைய தளபதிகள் தான் இவருடைய வெற்றிக்கு முக்கிய காரணமானவர்கள். அவர்கள் படைத் தளபதிகளாகவும் நிர்வாக அதிகாரிகளாகவும் செயல்பட்டனர். அவர்களில் கோரி முகமதுவின் அடிமையான குத்புதீன் ஐபக் தலை சிறந்தவர். தனக்குப் பிறகு குத்புதீன்ஐபக்கே தனது இந்தியப் பகுதிகளை நிர்வகிக்க வேண்டுமென விரும்பினார் கோரிமுகமது.

கோரிமுகமது இறந்ததும் அவருக்கு ஆண்வாரிசு இல்லாததால் இந்தியாவின் நிர்வாகப் பொறுப்பை குத்புதீன் ஐபக் ஏற்க வேண்டுமென்று உயர் அதிகாரிகள் வேண்டிக் கொண்டனர். அதன்படி ஐபக் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பின்னர் 1206 ஜுன் 24-ம் தேதி சுல்தானாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். டில்லி சுல்தானியம் இவ்வாறு நிறுவப்பட்டது.